காலத்தில் சுமார் $1\frac{1}{4}$ கோடிக்கு திட்டமிட்டு அது நடக்காமல் நின்றுவிட்டது. அதையும் கவனிக்கவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7—7—1980 திங்கள் கிழமை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) அவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

29. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத் தங்கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 3—12—1979ஆம் தேதியிடப்பெற்ற 2234 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 29/1974) 57 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

30. 'சென்னை மாநகரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டத் தில் காற்றழுத்த ஒலிப்பான் பயன்படுத்தப் பெறுவதை தடைசெய்து தமிழ்நாடு 1938 ஆம் ஆண்டு போக்குவரத்து விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 12—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 95 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் IV/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

31. ஏற்பளிக்கப்பெற்ற வங்கியாக பஞ்சாப்—சிந்து வங்கியினை (வரையறுக்கப்பெற்றது) சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 27—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 288 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 5]

32. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி செலுத்தப்பெற்று மாநிலங்களுக்கிடையே நடை பெறுகின்ற அறிவிக்கப் பெற்ற பொருள்களைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக் கட்டளைகள் துறையின் 308 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*12. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1980).

*13. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

*3-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS